**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI**
**Deposition of Witnesses for P.W. 2 in MCOP.No. 62/2023**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.தர்மராஜ் | தந்தை பெயர் | : திரு.காளிமுத்து |
| கிராமம் | : | வட்டம் | : |
| வயது | : | மாவட்டம் | : |

Solemnly affirmed accordance with the provisions of the Act of 1973 of the day of 04.02.2025.

**முதல் விசாரணை**

நான் எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை தேவதாஸ் மருத்துவமனையில் இருந்து 21.11.2022 மற்றும் 28.12.2022 தேதிகளில் என்னை விடுவிப்பு செய்ததை காட்டக்கூடிய விடுவிப்பு சான்றிதழ் ம.சா.ஆ.11. மேற்படி விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக 08.11.2022 தேதி முதல் 21.11.2022 தேதி வரையிலான காலத்திற்கு மருத்துவசெலவு செய்ததை காட்டக்கூடிய மருத்துவபில்கள் ம.சா.ஆ.12. என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் ஒப்புநோக்கப்பட்ட நகல் ம.சா.ஆ. 13. மேற்படி விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக 24.12.2022 தேதி முதல் 02.01.2023 தேதி வரையிலான காலத்திற்கு மருத்துவசெலவு செய்ததை காட்டக்கூடிய மருத்துவபில்கள் ம.சா.ஆ.14. மதுரை தேவதாஸ் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டின் அறிக்கையின் நகல் ம.சா.ஆ.15. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக தேவதாஸ் மருத்துவமனையில் இருந்து எடுக்கப்பட்ட ஸ்கேன் படம் 2 எண்ணிக்கை ம.சா.ஆ.16.

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

ம.சா.ஆ.12 மற்றும் 14 மருத்துவசெலவு குறித்த ரசீதுகள் சம்மந்தப்பட்ட மருத்துவமனையினால் மொத்தமாக தொகுத்து வழங்கிய ரசீதுகள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அந்த மொத்தமாக தொகுத்து வழங்கிய ரசீதுகளை பார்வையிட்டால் தான் உண்மையான மருத்துவசெலவு குறித்து தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. வேறு மருத்துவகாப்பீட்டு நிறுவனமானது எனக்கு ஏற்கனவே மருத்துவசெலவு குறித்த இழப்பீட்டை வழங்கியுள்ளதால்தான் மொத்தமாக தொகுத்து வழங்கிய ரசீதுகளை என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னால்

சரியல்ல. நான் மருத்துவசெலவுக்காக மொத்தம் ரூ.46819/- தொகை மட்டும் தான் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் சம்மந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்தால் தான் மருத்துவரசீதுகளின் உண்மை தன்மை தெரியவரும் என்று சொன்னாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் வாகனத்தை நான் தான் ஓட்டினேன். நான் வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்பட்ட சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று சொன்னால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இரு சக்கர வாகனத்தை ஓட்ட தெரியாமல் மேற்படி விபத்தை நான்தான் வலிய ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-தர்மராஜ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.